பட்டனமும் சூழலும் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 18 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 12 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபையின் இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் படியான வங்கி மீதி முறையே ரூபா 231,859 மற்றும் ரூபா 442,909 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அத்திகதியில் உள்ளவாறான வங்கி மீதியாக முறையே ரூபா 203,351 மற்றும் ரூபா 771,166 காட்டப்பட்டதனால் வங்கி மீதி ரூபா 299,749 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி ஊழியர் கடன் மீதி ரூபா.6,993,565 ஆக உள்ள போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடன் மீதி ரூபா.8,840,089 ஆகக் காணப்பட்டது. இதனால் ஊழியர் கடன் மீதி ரூபா.1,846,524 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 செலுத்தவேண்டிய கணக்குகள்

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபையில் கடமை புரிந்த 07 ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளங்கள் ரூபா.214,927 மீளாய்வாண்டின் இறுதி வரை கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

அறவிட வேண்டிய வீதவரி ரூபா.14,394,400 தொகை தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் | |
| (i) நிதி பிரமாணம் 880 | காசு மற்றும் களஞ்சியம் தொடர்பாக நிர்வாக ரீதியாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி பிரமாணம் 571 | ரூபா 335,750 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் X இன் விதி 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

1.3.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதி திட்டமிடல் அமைச்சின் 03/2014 ஆம் இலக்க 2014 திசெம்பர் 30 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சர்வதேச தொலைபேசி வசதியை சபையின் உத்தியோகத்தர்கள் பயன்படுத்துவதாயின் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு முரணாக செயலாளரின் அனுமதியின்றி சபையின் தலைவரால் மீளாய்வாண்டின் போது ரூபா 9,902 தொகைக்கு சர்வதேச அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு சபை நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் செயலாளரினால் பாவிக்கப்பட்ட வதிவிட தொலைபேசி வசதிக்காக ஒரு மாதத்திற்கு ரூபா 2,000 படி 2015 ஆம் ஆண்டிற்கு ரூபா 24,000 தொகையை அவரின் சம்பளத்துடன் செலுத்த வேண்டும். எனினும் சபை ரூபா 40,886 தொகையினை செலுத்தியுள்ளமையால் ரூபா 16,886 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் செயற்பாடுகள் ரூபா 36,061,611 மீண்டு வரும் செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 9,402,844 தொகையான செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

2.2.1 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை 31.12.2015 |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகளும் வரிகளும் | 17,033 | 23,714 | 14,394 |
| வாடகைகள் | 14,900 | 1,566 | 87 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 9,582 | 1,617 | 130 |
| ஏனைய வருமானம் | 2,522 | 2,441 | 629 |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா.14,394,400 கூட்டு மொத்தமான வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு இறுதி வரை நிறுவப்பட்டுள்ள 08 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணங்கள் அறவிடப்படாதமையால் மீளாய்வாண்டின் இறுதி வரை சபை ரூபா.279,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

2.2.4 நீதிமன்ற தண்டப்பணங்கள்

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2015 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய ரூபா.5,094,500 தொகையினை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் ஒன்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் வாசகர்களுக்கு இரவல் வழங்கப்பட்ட 3,196 நூலகப் புத்தகங்கள் இன்று வரை வாசகர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 04 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.82,318 தொகையான நிலுவைக் கடனை அவர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) டோக்கியோ சீமெந்துத் தொழிற்சாலையின் 2015 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியாக ரூபா 6,464,150 தொகையில் ரூபா 2,025,000 தொகை மாத்திரமே அறவீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சுற்றுலா விடுதிகளின் ஆண்டு வருமானத்திலிருந்து 1% உரிமைக் கட்டணம் அறவீடு செய்தல் வேண்டும். எனினும் சபையினால் தனது எல்லைக்குள் காணப்படும் 03 சுற்றுலா விடுதிகளில் 02 சுற்றுலா விடுதிகளில் உரிமைக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் 42 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,131,856 மொத்த தொகையான முற்பணங்கள் அவர்களிடமிருந்து மீளப்பெறப்பட்டிருந்த போதிலும் அவை நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக பெறவேண்டிய முற்பணங்களாகக் கொண்டுவரப்பட்டு வருகின்றன.

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்@ராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு மாற்றமாக சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டதுடன் இரண்டு ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதி 2014 மே தொடக்கம் செப்தெம்பர் வரை குறித்த காலத்தில் செலுத்தப்படாததால் அந்நிதியங்களுக்கும் ரூபா 17,079 தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

### சந்தைக்கட்டிட நிர்மாணம்

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா.23,515,530 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2012 செப்தெம்பர் 26 ஆந் திகதி சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தும் இக்கட்டிடம் இன்றுவரை உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ள படியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2015.12.31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
| நிறைவேற்றுனர் | 05 | 05 | -- | -- |
| உதவியாளர்கள் | 27 | 23 | 04 | -- |
| சிற்றூழியர்கள் | 61 | 84 | -- | 23 |
| ஏனையவர்கள் | -- | 26 | -- | 26 |

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான நான்கு வெற்றிடங்கள் கடந்த 05 வருட காலமாக நிரப்பப்படாமல் உள்ளது.

6.. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

அ. கணக்கீடு
ஆ. ஒப்பந்த நிர்வாகம்
இ. வாகனப் பயன்பாடு
ஈ. வருமான அறவீடு